සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம் தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province Department of Education, Southern Province

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

தென் மாகாணக் கல்வித் திணைக்களம்

Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025

இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	**இஸ்லாம்**	කාලය நேரம் Time	03 මණිත්.

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

பகுதி - I

கவனிக்க

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இலக்கம் 1 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (x) அடையாளமிடுக.**

---

01) அல்மாஉத் தாஹிர் எனும் பிரிவில் அடங்கும் நீர்

1) ஊற்று நீர் 2) கடல் நீர் 3) இள நீர் 4) மழை நீர்

02) ஒரு முஸ்லிம் செய்யும் செயல்கள் அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்படுவதற்கு அடிப்படை நிபந்தனையாக அமைவது.

1) வரவு 2) தவ்பா 3) ஈமான் 4) இஹ்லாஸ்

03) பெரிய நீர் தாடகம் ஒன்றில் பாசி படர்ந்ததனால் நீரின் நிறமும் சுவையும் மாற்றமடைந்துள்ளது இந்நீரில்

1) வுழு செய்யலாம்
2) வுழு செய்ய முடியாது
3) வுழு செய்யாதிருப்பது நல்லது
4) வுழு செய்து தொழலாம், ஆனால் சுத்தமான நீர் கிடைத்தால் மீண்டும் வுழு செய்து தொழ வேண்டும்.

04) நஜீர் விழுந்த, உறைந்த பாலை பயன்படுத்தும் போது உள்ள மார்க்க சட்டம் யாது?

1) அதனை பயன்படுத்த முடியாது
2) பொதுவாக நஜீஸ் ஆனவற்றை சுத்தம் செய்ய முடியாது.
3) நஜீஸ் விழுந்த பகுதியை எடுத்து விட்டு எஞ்சியதை பயன்படுத்த முடியும்.
4) உணவு தவிர்த்த ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்த முடியும்.

05) சுன்னா இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள் ஒன்றாக அமைவதற்கு பிரதான காரணி பின்வருவனவற்றுள் எது?

1) நபியவர்களை பின்பற்றுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளமை.
2) ஸஹாபாக்கள் நபி அவர்களை பின்பற்றியமை.
3) ஹதீஸ் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை.
4) ஹதீஸை எல்லோரும் பின்பற்றுகின்றமை.

06) அல்குர்ஆனை ஓதுவதற்கு நபி (ஸல்) அவர்கள் காட்டிதந்த ஒழுங்கு முறை

1) தர்தீபுத் திலாவத் 2) தர்தீபுத் நுதூள் 3) தர்தீபுத் நஸ்ர் 4) தர்தீபு சூரா

Past Papers Wiki

07) உஸ்மான் (ரழி) காலத்தில் கடற்படை உருவாக்கப்படுவதற்கு துணை நின்ற கவர்னர்

1) அலி (ரழி) 2) முஆவியா (ரழி) 3) தல்ஹா (ரழி 4) துபைர் (ரழி)

08) திருமணமானவரை குறிப்பதற்கு அல்குர்ஆன் பயன்படுத்தும் சொல்

1) ஸவ்ஜ் 2) முஹ்ஸன் 3) காழி 4) வலி

09) எம் மன்னனின் ஆட்சிக் காலத்தில் நான்கு முஸ்லிம்கள் வணிக ஆலோசர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்

1) ஸ்ரீ விக்ரம இராஜசிங்க 2) முதலாம் புவனேக பாகு

3) விஜயபாகு 4) மகா பராக்கியரம பாகு

10) குறைசியர்களின் கொடுமைகளை தாங்க முடியாத நிலை ஏற்பட்டபோது நபியவர்கள் தன் தோழர்களை எந்த நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

1) மிஸ்ர் 2) பஹ்ரைன் 3) யமன் 4) அபீசீனியா

11) பின்வரும் அட்டவணையில் (அ) நிரலில் சில அறிஞர்களின் பெயர்களும் (ஆ) நிரலில் அவர்களால் எழுதப்பட்ட நூல்களும் தரப்பட்டுள்ளன.

அ		ஆ	
01	இமாம் மாலிக் ரஹ்	A	கிதாபுல் புகாரி
02	இமாம் முஹம்மத் இப்னு இஸ்மாயில் ரஹ்	B	கிதாப் ஸீரத் றஸூலுல்லாஹ்
03	இமாம் ஷாபிஈ ரஹ்	C	கிதாபுல் முவத்தா
04	இமாம் முஹம்மத் பின் இஸ்ஹாக் ரஹ்	D	கிதாப் அல் உம்மு

மேலே (அ) நிரலுக்குப் பொருத்தமான விதத்தில் (ஆ) நிரலை ஒழுங்குபடுத்தப்படும் போது சரியாக அமையும் தெரிவு யாது?

1) B C D A 2) C A B D 3) C A D B 4) D B A C

12) இஸ்லாம் எல்லா விவகாரங்களிலும் நடுநிலைப் போக்கையே விரும்புகின்றது. இங்கு நடுநிலை என்பது

1) ரப்பானியா 2) வஸதிய்யா 3) சுமூழிய்யா 4) ஆலமிய்யா

13) ஹஜ்ஜுக்கு வேறாகவும் உம்ராவுக்கு வேறாகவும் நிய்யத் வைப்பது

1) கிறான் 2) இப்ராத் 3) ரமன் 4) தமத்துஉ

14) அல் குர்ஆனில் கிதாப், ஹிக்மா என்ற தொடர் சொற்களில் "ஹிக்மா" எனக் குறிப்பிடப்படுவதை இமாம் ஷாபிஈ (ரஹ்) எதனை குறிப்பதாக குறிப்பிடுகின்றார்.

1) குர்ஆன் 2) நபிமார்களின் வரலாறு 3) ஸுன்னா 4) ஸஹாபாக்களின் கருத்து

15) பின்வருவோரில் ஒரு மணமகன் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்ட பெண்

1) மனைவியின் மகள் 2) சாச்சியின் மகள் 3) மகனின் மனைவி 4) சகோதரனின் மகள்

16) பின்வருவனவற்றுள் தொழுகையின் ஓதல்களில் கட்டாயமானது

1) துஆஉள் இஸ்திப்தாஹ் 2) ஆயத்துல் குர்ஸி

3) ஸலவாத்துல் இப்ராஹீமியா 4) சூரத்துல் இக்லாஸ்

17) அல்லாஹ்வுடனும் அவன் தூதருடனும் போர் பிரகடனம் செய்ததற்கு சமமான குற்றமாக கருதப்படுவது?

1) இளஞ்ச ஊழல் 2) பதுக்கள் 3) வட்டி 4) விபச்சாரம்

18) கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களுக்கு அல்குர்ஆனை தொகுப்பதற்கு ஆலோசனை வழங்கிய ஸஹாபி

1) ஸைத் (ரழி) 2) உமர் (ரழி) 3) முஆத் (ரழி) 4) ஹுதைபத் யமாணி (ரழி)

19) (அ) பகுதியிலிருந்தும் தகவலுக்கு பொருத்தமான தகவலை (ஆ) பகுதியுடன் இணைத்தால் வரும் சரியான சேர்மானம்

அ		ஆ	
01	அல் உர்பு	A	நபித் தோழர்களின் கூற்று
02	அல் கியாஸ்	B	சமூக நலன்
03	கௌலுஸ் ஸஹாபி	C	வழக்காறு
04	மஸ்லஹா முர்ஸலா	D	ஓப்பு நோக்குதல்

1) D C B A 2) C D B A 3) C D AB 4) D C A B

20) ஹதீஸ்களை நூல் உருவாகும் பணிக்கு முக்கியத்துவம் அளித்த கலீபா

1) உமர் இப்னு கத்தாப் (ரழி) 2) அபூபக்கர் முஹம்மத்

3) சியாபுதீன் ஸுகுரி 4) உமர் இப்னு அப்துல் அஸீஸ்

21) வியாபாரம் தொடர்பான சட்ட விளக்கமுள்ளவர்களை தவிர ஏனையோர் சந்தையில் வியாபாரம் செய்யக்கூடாது எனக் கூறியவர்

1) உமர் (ரழி) 2) அலி (ரழி) 3) உஸ்மான் (ரழி) 4) முஆவியா (ரழி)

22) பின்வருவனவற்றுள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை சுட்டும் தொடர்

1) ரப்புன்னாஸ் 2) ஹுதன் லின்னாஸ் 3) ரப்புல் ஆலமீன் 4) ரஹ்மத் லில் ஆலமீன்

23) காமில் அஸர் தொழுகையை ஜமாத்தோடு நிறைவேற்றுவதற்காக அவசரமாக பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான் போகும் வழியில் மோட்டார் சைக்கிளில் விபத்துக்குள்ளாகிய ஒருவரை காண்கிறான், ∴பிக்ஹுல் அவ்வுலவியாத் கற்ற மாணவன் என்ற வகையில் அவன் முன்னுரிமை படுத்தப்பட வேண்டியது

1) தொழுகையை ஜமாத்துடன் நிறைவேற்ற பள்ளிக்கு சென்று விடுதல்
2) நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லல்
3) கண்டும் காணாதது போல் சென்று விடுதல்
4) வேறு ஒருவர் அதனை பார்த்துக் கொள்வார் என்று பள்ளிக்குச் செல்லுதல்

24) "நிச்சயமாக என்னை விட திறமையாக கவி பாடக்கூடிய எவரும் உலகில் இல்லை ஆனால் முஹம்மதின் வார்த்தைகள் அவற்றுள் எதையும் ஒத்ததாக இல்லை அவர் கூறும் சொற்கள் இனிமையானவை அதன் மேற்பகுதி கனிந்தது கீழ் பகுதி பசுமையானது" என்று கூற்று யாருடையது.

1) லபீத் 2) இம்ரஉல் கைஸ் 3) வலீத் இப்னு முகீரா 4) அபூஜஹல்

25) ஹதீஸில் இடம்பெறும் மூலக் கருத்தை விளக்கும் பகுதி

1) இஸ்னாத் 2) ஆகாத் 3) மதன் 4) ஸநத்

26) பைஅதுஷ் ஷஜரா ஒப்பந்தம் எத்தனையாம் ஆண்டு இடம் பெற்றது

1) ஹிஜ்ரி 4 2) ஹிஜ்ரி 5 3) ஹிஜ்ரி 6 4) ஹிஜ்ரி 7

27) டீ.எஸ். சேனாநாயகவின் அமைச்சர் அவையில் தொழில் அமைச்சராக இருந்த முஸ்லிம் தலைவர்

1) எம்.சீ. சிததி லெப்பை 2) டீ.பீ. ஜாயா 3) வாபிச்சி மரிக்கார் 4) ஏ.எம்.ஏ. அஸீஸ்

28) இமாம் ஷாபி ரஹ் அவர்களின் பிறப்பிடம்

1) மதீனா 2) கூபா 3) பக்தாத் 4) காஸா

29) பின்வருமவனவற்றுள் சரியான கூற்றை தெரிவு செய்க.

1) குல்லதைனைவிட அதிகமான நீர் "மாஉன் கலீல் ஆகும்.
2) ஜாமிஉல் பயான் என்பது உஸ்மான் (ரழி) அவர்களின் சிறப்புப் பெயர் ஆகும்.
3) மணமகளால் மணமகனுக்கு மஹர் வழங்கப்பட வேண்டும்.
4) ஹிஜ்ரி 13 இல் உமர் (ரழி) அவர்கள் கலீபா ஆனார்கள்.

30) ஹஜ் கடமையின் போது கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய வாஜிபான தவாப்.

1) தவாபுல் குதூம் 2) தவாபுல் இபாழா 3) தவாபுல் விதா 4) தவாபுல் வதா

31) அரச அத்துமீறலில் இருந்து தனது ஈமானை பாதுகாத்த இளைஞர்களின் வரலாறு கூறப்படும் ஸூரா

1) கஹ்ப் 2) பகரா 3) மாஇதா 4) நிஸா

32) இஸ்லாமியப் பொருளாதாரத்தின் அடிப்படைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் கோட்பாட்டு ரீதியிலான அடிப்படையை தெரிவு செய்க.

1) அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல்

2) செலவு செய்வதிலும் சேமிப்பதிலும் நடுநிலை பேணல்

3) தனிநபர்களின் சொத்தில் சமூகத்துக்கும் பங்குண்டு

4) வட்டி பொருளாதார விடயங்களில் இடம்பெறாமல் கவனமாயிருத்தல்.

33) தொழுகையின் போது நாம் "இய்யாக ந.ஃபுது வஇய்யாக நஸ்தஈன்" என்று ஓதுகின்றோம். இதன் கருத்து

1) இறுதி நாளின் அதிபதி

2) உன்னையே வணங்குகின்றோம். உன்னிடமே உதவி தேடுகின்றோம்.

3) எமக்கு நேர்வழியைக்காட்டுவாயாக.

4) அளவள்ள அருளாளன், நிகரற்ற அன்புடையோன்.

34) இந்தியாவில் சிந்துப் பிரதேசத்தை வெற்றி கொண்ட முஸ்லிம் தளபதி

1) தாரிக் பின் ஸியாத் 2) ஹஜ்ஜாஜ் பின் யூஸுப்

3) மன்னர் அக்பர் 4) முஹம்மது இப்னு காஸிம்

35) முஜ்தஹித்கள் பெரும்பான்மையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இஜ்மா

1) இஜ்மா ஸரீஹ் 2) இஜ்மா அக்சரியா 3) இஜ்மா ஸுகூறி 4) இஜ்மா முரக்கப்

36) நபி (ஸல்) அவர்கள் குறிப்பாக ஸுபஹ் தொழுகையின் பின் அல்லாஹ்விடம் கேட்ட விடயங்கள்

1) கோழைத்தனம், உலோபித்தனம் என்பவற்றை விட்டும் பாதுகாப்பு

2) செல்வத்தையும் நீண்ட ஆயுளையும்

3) பயனளிக்கும் கல்வி, ஹலாலான உணவு, ஏற்றுக் கொள்ளப்பட்ட அமல்

4) சுவர்க்கத்தை கேட்டதுடன் நரகத்தை விட்டும் பாதுகாப்பும்.

37) ஒரு முஸ்லிமிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம், ஆனால் அவனிடம் இரண்டு விடயங்கள் அவனிடம் இருக்க கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவை

1) பொய்யும் நாணயமின்மையும் 2) வட்டியும் விபச்சாரமும்

3) களவும் பொய்யும் 4) மோசடியும் களவும்

38) "நான் வயிரார உண்டால் ஏழைகளின் பட்டினியை மறந்து விடுவேன் என அஞ்சுகிறேன்" எனக்கூறிய நபி,

1) யூசுப் (அலை) 2) ஈஸா (அலை) 3) தாவூத் (அலை) 4) ய.ஃகூப் (அலை)

39) "ஹஜ் கடமையான நிலையில் மரணித்த எனது தந்தையாருக்காக நான் ஹஜ் செய்யலாமா? என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு பெண் வினவினாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறிய பதில் சட்ட மூலாதாரங்களில் ஒன்றுக்கு ஆதாரமாக அமைகின்றது. குறித்த சட்ட மூலாதாரம்

1) குர்ஆன் 2) ஹதீஸ் 3) இஜ்மா 4) கியாஸ்

40) ஒரு பெண்ணுடைய மாதவிடாய் காலத்தில் ஒருவர் தலாக் சொன்னால் அது

1) தலாக் பாஇன் 2) தலாக் ராஜஇ 3) தலாக் ஸுன்னி 4) தலாக் பிதஈ

Past Papers Wiki

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	இஸ்லாம் II Islam II	කාලය நேரம் Time

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

அறிவுறுத்தல்கள்

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களை தெரிவு செய்து விடையளிக்குக.**

01)

1) சுத்தத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் ஹதீஸ் ஒன்று தருக.

2) அகீதா பிரிவுகளில் "அர்ரூஹானியாத்தில்" உள்ளடங்கும் விடயங்கள் இரண்டு தருக.

3) செல்வத்துடன் தொடர்புடைய இபாதத்துக்கள் இரண்டு தருக.

4) தயமம் செய்யப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

5) நரகை காணாத மூன்று கண்கள் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட கண்களுல் இரண்டைக் குறிப்பிடுக.

6) மக்கா, மதினா ஆகிய நகரங்களின் பழைய பெயர்களை தருக.

7) ஷரிஆவின் பார்வையில் இத்தாவின் நோக்கங்கள் இரண்டு தருக.

8) இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள விசேட உரிமைகள் இரண்டு தருக.

9) இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய இரண்டு அரபு நூல்களின் பெயர்களை குறிப்பிடுக.

10) சுன்னத்தான வணக்க வழிபாடுகளால் கிடைக்கும் பயன்கள் இரண்டை தருக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02)

1) ஜமாஅத் உடன் தொழுவதனால் கிடைக்கும் பயன்கள் 2 தருக.

2) ஸகாத்தை கூட்டாக நிறைவேற்றுவதனால் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக.

3) ஹஜ்ஜின் பிரதான தளங்கள் ஐந்தை குறிப்பிட்டு அங்கு நிறைவேற்றப்படும் கிரிகைகளை குறிப்பிடுக. **(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

03)

1) கியாஸ் என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.

2) இஜ்மாவின் வகைகள் மூன்றை குறிப்பிடுக.

3) கியாஸின் அர்க்கான்களை உதாரணத்துடன் விளக்குக. **(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

04)

1) இஹ்லாஸ், தஸ்கியா ஆகிய பதங்களின் கருத்துக்களை தருக.

2) சூரத்துல் புர்கானில் குறிப்பிடப்படும் நல்லடியார்களின் பண்புகள் மூன்று தருக.

3) தவ்பா என்றால் என்ன எனக் குறிப்பிட்டு, அதன் நிபந்தனைகளை குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05)

1) வியாபாரத்திற்கும் வட்டிக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

2) இஸ்லாமிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் மூன்று தருக.

3) இஸ்லாம் அனுமதித்துள்ள பொருளாதார முறைமைகள் நான்கினை குறிப்பிட்டு, இரண்டை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06)

1) அரபு வியாபாரிகள் இலங்கையில் தங்கிச்செல்ல வழிவகுத்த காரணிகள் இரண்டை தருக.

2) நபி (ஸல்) அவர்கள் ஆரம்ப காலங்களில் பயன்படுத்திய ஊடக வழிமுறைகள் மூன்றை குறிப்பிடுக.

3) இலங்கையின் தேசிய நலனுக்காக முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புகளை சுருக்கமாக விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) கீழ்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) அல்குர்ஆனின் அற்புதங்கள்

2) உமர் (ரழி) அவர்களின் சேவைகள்

3) உலக வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்

4) டீ.பீ. ஜாயா **(5 + 5 = 10 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank